# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2304/34 - 2022 නොවැම්බර් මස 01 වැනි අඟහරුවාදා - 2022.11.01

*2304/34 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

*பணிப்புரை இல. 87*

***2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டம் (திருத்தப்பட்ட)***

*10(1) (ஆ)* (ii) *ஆம் பிரிவின் கீழான விசேட பணிப்புரை*

*2003 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைச் சட்டத்தின் 10(1) (ஆ)* (ii) *ஆம் பிரிவின் கீழ் உரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் செயற்பட்ட வண்ணம் இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்கனவே பொதியிடப்பட்ட பண்டங்கள், வகுதிகள் மற்றும் உற்பத்திகள் தொடர்பில் அனைத்து இறக்குமதியாளர்களினாலும் அவ் உற்பத்திகள் நாட்டினுள் உள் நுழையும் இடத்திலேயே அப்பண்டங்களின் மேற்புறத்தில் அப்பண்டத்துக்கு உரித்தான இறக்குமதியாளரினால் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு முன்வைக்கப்பட்ட பிரகடனப்படுத்தப்பட்டுள்ள "அதி கூடிய சில்லறை விலை"* (Maximum Retail Price), *இறக்குமதியாளரின் பெயர் மற்றும் பதிவு செய்யப்பட்ட முகவரி போன்ற விபரங்களை ஆங்கில மொழியில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டுமென இத்தால் பணிக்கப்படுகின்றது.*


1A - PG 6025 — 81 (2022/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இப்பணிப்புரை கீழே குறிப்பிடப்பட்டுள்ள பண்டங்கள் மற்றும் உற்பத்திகளுடன் தொடர்புபடும்.

- இனிப்புப் பண்டங்கள் (சுயிங்கம் உள்ளடங்கலாக) உள்ளடக்கத்தின் பாகுபாட்டு இலக்கம் (HS code) 1704
- சாக்கலேட் உள்ளடக்கத்தின் பாகுபாட்டு இலக்கம் (HS code) 1806
- பிஸ்கட் உள்ளடக்கத்தின் பாகுபாட்டு இலக்கம் (HS code) 1905
- கேக் உள்ளடக்கத்தின் பாகுபாட்டு இலக்கம் (HS code) 1905
- வாசனை சவர்க்காரம் உள்ளடக்கத்தின் பாகுபாட்டு இலக்கம் (HS code) 3401

இப்பணிப்புரை 2022, நவெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து செல்லுபடியாகும்.

மேலும் 2007, யூலை மாதம் 11 ஆந் திகதிய இலக்கம் 1505/ 15 ஐ உடைய அரசின் அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 12 ஆம் இலக்க பணிப்புரை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் கட்டளைப்படி,

**ஷாந்த நிரிஎல்ல,**
தவிசாளர்.

கொழும்பு,
2022, நவெம்பர் 01.

EOG 11-0014

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.